குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.54/2024

ம.சா. 1

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் தேதி சனி கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிக்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.28 மணி,

Complainant Ravikumar present. Advocate Mr.A.Sundharam present for Complainant. Accused Chellam present. Advocate Mr.Ramprakash present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) கந்தசாமி பிளை ஆஸ் நிறுவனம் சிமெண்ட் கற்கள் தயாரிக்கும் தொழில் என்றால் சரி. மேற்படி கற்கள் தயாரிக்க கல்குவாரியில் இருந்து எம்சாண்ட் மற்றும் பிசாண்ட் ஆகியவற்றை வாங்கி தான் தயாரிக்க முடியும். பிளை ஆஸ் தொழில் வேறு கல்குவாரி தொழில் வேறு என்றால் சரி. கிரசரில் இருந்து எம்சாண்ட் மற்றும் பிசாண்ட் ஆகியவற்றை பெற்று வந்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேற்படி கிரசரின் உரிமையாளர் நான் தான். மேற்படி கிரசரின் உரிமையாளர் என்பதற்கு ஆர்சி ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

2) கல்குவாரியில் இருந்து அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி வருகிறேன். தற்போது வரை எனது பெயரில் தான் மேற்படி கல்குவாரி இயங்கி வருகிறது. அதற்கான விபரங்கள் அடங்கிய கோப்புகளை பராமரித்து வருகிறேன். எந்த தேதி உள்ள காசோலையை என்னிடம் ஆஜர் எதிரி கொடுத்தார் என்றால் 16.01.2024 ம் தேதியிட்ட காசோலையை கொடுத்தார். மேற்படி காசோலையில் உள்ள ஆஜர் எதிரியின் கையொப்பத்தை பார்த்தால் சொல்வேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் ஆஜர் எதிரியின் கையொப்பமா என்றால் அதுபோல தான் தெரிகிறது.

3) ஆஜர் எதிரி கடனுறுதி சீட்டை கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அந்த கடனுறுதி சீட்டை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வட்டித்தொகை எவ்வளவு நிலுவையில் உள்ளது என்றால் வாங்கிய பணம் எதுவும் திரும்ப தராததால் வட்டியை கணக்கிடவில்லை. கந்தசாமி பிளைஆஸ் நிறுவனத்திற்கு வேறு கிளைகள் உள்ளதா என்றால் இரண்டு கிளைகள் உள்ளது. ஒரு கிளைக்கு எனது சகோதரர் உரிமையாளர் ஆவார். அசல் தொகையை மட்டும் தான் என்னுடைய புகார் மனுவில்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. ஆஜர் எதிரி வட்டி தொகையை செலுத்தியதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் செலுத்தவில்லை.

4) இவ்வழக்கு காசோலையை என்னிடம் ஆஜர் எதிரி தான் கொடுத்தார். மேற்படி காசோலையில் தொகையையும் கையொப்பமும் ஆஜர் எதிரி நிரப்பினார், மற்ற விபரங்கள் ஆஜர் எதிரி உடனிருந்தவர் நிரப்பினார். இவ்வழக்கு காசோலையில் கையொப்பம் ஒரு மையினாலும் மற்ற விபரங்கள் வேறு மையினாலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள ஆஜர் எதிரியின் கையொப்பமும், காசோலையில் உள்ள ஆஜர் எதிரியின் கையொப்பமும் வேறுவேறாக உள்ளது என்றால் சரியாக கவனிக்கவில்லை.

5) என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு சரியாக சார்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின் கணவர், கந்தசாமி பிளை ஆஸ் நிறுவனத்தில் எம்சாண்ட் வாங்கி தொழில் செய்து வந்தார் என்றால் அதற்கு பிணையாக கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் மற்றும் அவரது கணவரும் தனித்தனியாக எனது நிறுவனத்தில் வரவு செலவு வைத்திருந்தார்கள் என்றால் சரி. ஆஜர் எதிரி எனக்கு கடன் கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும் அதற்கான ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.48 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.